**தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில்

உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தில் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னையஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் 1.6.1(ஆ)(ii), 1.6.1(ஆ)(iii), 1.6.1(உ)(ii), 1.6.1(உ)(iii) ஆகிய பந்திகளின் கீழ் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வின் போது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாத பொருட்களாக இனங்காணப்பட்டுள்ள 17 வகையான 41 நிலையான சொத்துக்களை மீளாய்வாண்டின் போது அழிப்பதன் மூலம் கைதவிர்ப்புச் | ஆண்டின் போது கைதவிர்ப்புக்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். | இச்சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காத தனால் மற்றும் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காட்டுவதற்கு முடியாததனால் அவ்வாறு பதியப்பட்டிருக்கவில்லை. தற்பொழுது அனைத்து சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-6 படிவத்தின் கீழுள்ள நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கைதவிர்ப்பின் கீழ் அறிக்கையிடுவதற்கு அல்லது நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சொத்துக்கள் கைதவிர்ப்பினை நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) | 2018 யூலை 16 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் 2019 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய SA/AS/AA/Circular ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் குத்தகை சொத்துக்களை கொள்வனவு செய்தல் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் போது ரூபா 59,044,000 கூட்டு மொத்தமான 07 குத்தகை வாகனங்களைக் கொள்வனவு செய்தல் நிதிக் கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும், அலுவலகத்தில் புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் (New CIGAS) பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையில் குத்தகைச் சொத்துக்களை கொள்வனவு செய்தலாக 02 குத்தகை வாகனங்களின் ரூபா 16,910,000 கூட்டு மொத்த பெறுமதி மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மிகுதியான 05 குத்தகை வாகனங்களின் ரூபா 42,134,000 கூட்டு மொத்த பெறுமதியானது நேரடிக் கொள்வனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் குத்தகை சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | காட்டப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட பெயர் குறித்த குறியீடுகளை சரி செய்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| (அ) கடமைத் தொலைபேசிப் பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் கடமைத் தொலைபேசிப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கடமைத் தொலைபேசிப் பதிவேட்டினை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். | தொலைபேசிப் பட்டியல்களுக்குப் பணம் செலுத்தும் போது உரிய கொடுப்பனவு விபரங்களை பதிவேட்டில் பதிந்து கொடுப்பனவு செய்யப்படுவதுடன் அதில் ஏதாவது தவறுகள் இருக்குமாயிருந்தால் மேலும் நாளதுவரையாக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் | | |
| நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொது 267 படிவத்திற்கு இணங்க வாகன சம்பவக் குறிப்பு புத்தகமானது அனைத்து வாகனங்கள் சம்பந்தமாகவும் நாளதுவரையாகப் பேணப்படுதல் வேண்டும். | உங்களால் தெரியப்படுத்தியதற்கு இணங்க மீண்டும் பரீட்சித்து ஏதாவது தவறுகள் இருக்குமாயிருந்தால் சரி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. |

(இ) வாகனங்களை பட்டியற்படுத்தும் பதிவேடு

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1647(உ) பிரிவின் பிரகாரம் வாகனங்களின் ஒரு பட்டியற்படுத்தப்பட்ட பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகனங்களின் பட்டியற்படுத்தப்பட்ட பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | அலுவலகத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வாகனங்கள் சம்பந்தமான விபரங்களின் அறிக்கை கணனியின் மூலம் நாளதுவரையாக்கி பேணப்படுவதுடன் அந்த விபரங்களை உங்களுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உரிய விபரங்களை பதிவேடாகப் பேணுவதற்கு உத்தியோகத் தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 109 | 2017 செப்தெம்பர் மாதத்தின் போது ஒரு வாகனம் விபத்துக்குள்ளாகியதன் காரணமாக ரூபா 358,721 தொகையான நட்டத்தில் ரூபா 10,809 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையும் பொறுப்பான தரப்பினரடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணாமல் போதல் / சேதம் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்திலுள் ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த விபத்து சம்பந்தமாக குற்றவாளியான சாரதியிடமிருந்து இப் பணத்தை அறவீடு செய்து இந்த அலுவலகத்திற்குச் செலுத்துமாறு உரிய அமைச்சிற்குத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக உரிய அமைச்சிடம் மீண்டும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104 | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்கள் எத்தனை என்பது வெளிப்படுத்தப் பட்டிருக்காததுடன் வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் விசாரணைகளை நடாத்தி முடித்தமைக்கு சான்றுகள் காணப்படவில்லை. அதற்காக தயாரிக்கப்பட வேண்டிய இறுதி அறிக்கையின் பிரதி 2020 யூன் 03 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. | காணாமல் போதல் / சேதங்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்திலுள் ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் உரிய அறிக்கையின் பிரதிகளை கணக்காய்விற்கு ச் சமர்ப்பித்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த இறுதி ஆண்டிற்காக அந்த ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்கள் தொடர்பாக தொடக்க புலனாய்வு மேற்கொள்ளப்பட்ட துடன் புலனாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மற்றும் தொடக்க புலனாய்வு விசாரணை உத்தியோகத்தர்களி ன் சிபார்சுகளை அடிப்படையாகக் கொண்டு கோவைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அக்கோவைகளை கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 138(5), 231(1) | இன்வொயிஸ்களின் மூலப் பிரதிகளுக்காக பெக்ஸ் மற்றும் ஈ மெயில்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட இன்வொயிஸ்கள் மற்றும் இன்வொயிஸ்களின் போட்டோ பிரதிகளுடன் வவுச்சர்கள் சான்றுப்படுத்தப்பட்டு ரூபா 2,502,559 கூட்டுமொத்தமான 31 வவுச்சர்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணங்க ளிலுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | இவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டதானது உரிய பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்க ளிடமிருந்து உரிய பொருட்களை அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முதலில் பணத்தை செலுத்தவேண்டியிரு ந்த சந்தர்ப்பங்களி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | னாலாகும். மூலப் பிரதியிலும் பெக்ஸ் / போட்டோ பிரதியிலும் வித்தியாசங்கள் காணப்படாததனால் எதுவித ஒழுங்கீனமும் இடம்பெற்றிருக்க வில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 208(3), 211(3), 145(3), 146 மற்றும் 449 | இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 600,000 முற்பணத்திற்காக விலைப்பட்டியல்கள் பெற்றுக்கொள்ளப்படாது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இத்திருத்தங்களை மேற்கொள்ளும் போது இலங்கை கடற்படைக்கு நிதி ஏற்பாட்டினை ஒப்படைத்து உரிய செயற்பாட்டினை செய்து கொள்ள முடியாதிருந்ததனால் அவர்களுக்கு கட்டுநிதி முற்பணங்களை வழங்கி அச்செயற்பாட்டினை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை<br>------------------------------------ | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க, 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(i) ஆம் இலக்க மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | அமைச்சு பதவியணியினர், அமைச்சு செயலாளர், நிறுவனத் தலைவர் ஆகியோரை உள்ளடக்கிய அனைத்து அரசாங்க ஊழியர்களும் தங்களது சேவை நிலையத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளிச் செல்லலினை விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர் களும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதானது நிர்ணயிக்கப்பட்டவாறு வருகை மற்றும் வெளிச் செல்லலினை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டதன் பின்னர் எனக் குறிப்பிடுகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் IV ஆம் பந்தி | நிரந்தர கடமை நேரங்களுக்குப் பின்னர் செலுத்தப்படுகின்ற படிகளுக்காக காலம் அடிப்படையாகக் கொள்ளப்படு மாகயிருந்தால் அக்காலம் விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், விரல் அடையாளமிடும் விரல் அடையாளமிடும் இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச் செல்லலினைப் பதிவு செய்யாது மீளாய்வாண்டில் பிற்பகல் 6.30 மணியின் பின்னர் பாராளுமன்றக் கூட்டங்கள் முடிவடைந்த திகதிக்காக ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 750 வீதம் ரூபா 2,051,575 மொத்த தொகையான போக்குவரத்து (கூட்டங்கள்) படிகள், ரூபா 2,207,109 தொகையான மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தினச் சம்பளங்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காகச் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்கான கொடுப்பனவுகள் ரூபா 1,157,291 தொகையுமாக ரூபா 5,415,975 மொத்த தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | சுற்றறிககை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள தானது நிர்ணயிக்கப்பட்டவாறு வருகை மற்றும் வெளிச் செல்லலினை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டதன் பின்னர் எனக் குறிப்பிடுகின்றேன். |
| (இ) | அரசாங்க நிதி சுற்றறிக்கை<br>----------------------------------- | | | |
| (i) | 2016 பெப்ரவரி 16 ஆந் திகதிய 431(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விமான டிக்கட்டுக்களைக் கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளை மீறி விமான டிக்கட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்காக | சுற்றறிக்கை யிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேசிய விமான சேவைகளிலிருந்து விமான டிக்கட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 308,546 செலவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | எதிர்க்கட்சித் தலைவரின் இரண்டு உத்தியோக பூர்வ இல்லங்களான B-12 ஆம் இலக்க அரசாங்கத்தின் பங்களா இல்லம் மற்றும் விஜேராம உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | B-12 உத்தியோகபூர்வ இல்லம் பாராளுமன்ற விவகார அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த தனால் இந்த உத்தியோகபூர்வ இல்லத்திலுள்ள பொருட்களுக்காக 2020-06-02 ஆந் திகதி அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு வழங்கும் கட்டளை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை<br>------------------------------------ | | | |
| (i) | 2014 சனவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1.4 ஆம் பந்தி | அரசாங்க ஊழியர்களின் பயிற்சி மற்றும் இயலுமையினை மேம்படுத்துவதற்கான நிதி ஏற்பாட்டினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது பயிற்சி மற்றும் இயலுமையினை மேம்படுத்துவதற்காக செலவு செய்யப்பட்டுள்ளரூபா 447,823 மொத்த தொகை மீண்டுவரும் நிதி ஏற்பாடடின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதற்காக 2401 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் திறை சேரியிடமிருந்து மேலதிக நிதி ஏற்பாடு வேண்டப்பட்டிருந்தும் அதற்காக நிதி ஏற்பாடு கிடைத்திருக்காததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக நிதி ஏற்பாட்டினுள் செலவினை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தினால் BD/GPS/19/1/2/1-2019 ஆம் இலக்க 2019-10-08 ஆந் திகதிய கடிதத்தினால் தெரியப்படுத்தப் பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க மற்றும் 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை மீறி உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி 07 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு சுற்றுலா / கல்வி பயணங்களுக்காக ரூபா 932,485 தொகையும் வெளிநாட்டு பயணச் செலவுகளை முடியுமான அளவு குறைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் அதற்கு முரணாக மூன்று உத்தியோகத்தர்களின் 02 வெளிநாட்டு சுற்றுலா / கல்வி பயணங்களுக்காக ரூபா 447,823 தொகையுமாக மீளாய்வாண்டின் மே மாதத்திலிருந்து ஒக்தோபர் மாதம் வரையான காலத்தில் ரூபா 1,380,308 மொத்த தொகையான செலவுகள் செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த அலுவலகத்தின் ஒரு உத்தியோகத்தருக்கு மலேசியா பாராளுமன்ற முறைமை தொடர்பாக ஆய்வு செய்வதற்காக 03 நாட்கள் வெளிநாட்டு கல்வி வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே மூன்று உத்தியோகத்தர் களுக்கு சீனாவில் கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்காக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு நிதி அமைச்சின் 01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம்பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரியினால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றுடன் ஒப்பீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே அறிக்கையிடப்படாத ஏதாவது கடப்பாடு அல்லது பொறுப்பு முன்னைய ஆண்டிற்கான செலவாக தீர்த்து வைக்கப்பட | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (iii) இன் கீழ் காட்டப்பட்டிருந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரியினால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு (iv) இன் கீழ் காட்டப்பட்டுள்ள பொறுப்புக்களானது அடுத்து வரும் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டின் மூலம் கொடுப்பனவு செய்யும் எதிர்பார்ப்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பொறுப்பாக உள்ளது. CIGAS கணனி மென்பொருளினூடாக பொறுப்புக்களை உள்ளடக்க கூடியதானது காணப்படுகின்ற நிதி ஏற்பாடு |

| | | |
|---|---|---|
| வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு திறைசேரியினால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அறிக்கையிப்படாதிருந்த ரூபா 213,710 மொத்த தொகையான மீளாய்வாண்டிற்கான கடப்பாடுகளும் பொறுப்புக்களுமாக 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | இணங்கியிருக்க வேண்டியதுடன் அவ்வாறு அறிக்கையிடப்படாத எந்த பொறுப்போ அல்லது கடப்பாடோ முன்னைய ஆண்டிற்கான செலவாக 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். | எல்லைக்குள்ளாகும். அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டின் போது அப்பொறுப்புக்களை பொறுப்புக்களாக CIGAS மென்பொருளுக்குள் உள்ளடக்க முடியாதிருந்தது. அதன் காரணமாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பொறுப்புக்கள் கூற்றில் இப்பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை என குறிப்பிடுகின்றேன். |